**சீத்தாவகபுற நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீத்தாவகபுற நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலமாக ஒன்றுசேர்ந்து காணப்பட்ட சட்டரீதியாக அறவிடமுடியாதுள்ள நிலுவை வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 14,250,610 தொகையினை பதிவழிப்பதற்காக 2018 மார்ச் 06 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், இப்பெறுமதி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் மூலதனச் செலவினத்தின் கீழ் உபகரணச் செலவு ரூபா 3,391,289 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது உள்ளபடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,964,778 ஆனமையால் மூலதனச் செலவினம் ரூபா 426,511 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நீர்த்தாங்கி மற்றும் ஏணி என்பவற்றின் பெறுமதியான ரூபா 264,000 தொகை தளபாடங்களினதும் பொருத்திகளினதும் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 2,466,483 தொகையை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) 03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளுக்கும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளுக்கும் இடையே ரூபா 64,360,739 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்புக் கணக்குகள் மீதி ரூபா 434,179 தொகைக்கும், ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 423,179 இற்கும் இடையே ரூபா 11,000 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

முற்பணம் ரூபா 842,357 தொகை, தனியார் பேரூந்து தரிப்பிடக் கட்டணம் ரூபா 230,700 தொகை மற்றும் சந்தை கடை வாடகை ரூபா 3,603,200 தொகை என்பன நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 60,607,908 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் அரசாங்க மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கூட்டுமொத்தமான மீதி ரூபா 6,407,974 ஆக இருந்ததுடன் நடப்பாண்டின் போதும் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

சபைக்குச் சொந்தமான 26 காணி கட்டிடங்களினது உரித்தை உறுதிப்படுத்தும் உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்திட்டமொன்றான வெளியிடப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டிய 10 செயற்திட்டங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(5) | 842,357 | மீளாய்வாண்டின் இறுதியில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தீர்க்கப்படாத முற்பண மீதி 06 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஏனைய சுற்றறிக்கைகள் | | |
| (i) | மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2016 யூலை 11 ஆந் திகதிய LGD/08/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | உள்ளுராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான காணி மற்றும் ஆதனங்களை பௌதீக ரீதியில் இனங்காண்பதற்கும், நில அளவையாளர் மூலம் அளவையிடல் தொடர்பாக 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதி 05 உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | 140,647 | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்காக பேணிச் செல்லப்படுகின்ற வைப்புக் கணக்கில் உள்ள பணம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன் அங்கீகாரம் பெறப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளில் மாத்திரம் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட பணம் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 142,356,710 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 148,152,951 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 21,095,000 | 21,063,558 | 20,671,264 | 6,441,094 | 18,894,000 | 21,191,271 | 23,079,467 | 6,880,726 |
| வாடகை | 29,328,800 | 30,764,376 | 31,165,161 | 17,229,680 | 23,553,000 | 28,338,254 | 21,517,764 | 3,658,514 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,443,500 | 845,394 | 845,394 | 89,710 | 450,000 | 772,909 | 184,682 | 43,542 |
| ஏனைய வருமானம் | 30,907,200 | 20,701,300 | 30,418,236 | 1,864,955 | - | - | - | - |

### 2.2.2 வீதவரியும் வரியும்

**ஆதனவரி**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 6,432,554 இல் ரூபா 2,779,670 தொகை முன்னைய ஆண்டிற்கான நிலுவை ஆதன வரியாகும்.

### 2.2.3 வாடகை

**கடை வாடகை**

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவை கடை வாடகை வருமானம் ஆன ரூபா 3,856,121 இல் ரூபா 1,861,463 தொகை முன்னைய ஆண்டிற்கான நிலுவை கடை வாடகை ஆகும்.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீன் மற்றும் இறைச்சி கடை வாடகை நிலுவை ரூபா 252,921 ஆகும்.

(iii) நகர சபை 2017 ஆகஸ்ட் மாதம் முதல் கடை வாடகை திருத்தஞ் செய்யப்பட்டிருந்த போதிலும், சீத்தாவகபுற தேசிய சந்தை மற்றும் பொதுச் சந்தை கடைக்காக திருத்தம் செய்யப்பட்டதற்கு முன்னர் காணப்பட்ட வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள்

மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

குளக்காட்டின் சுற்றாடல் வலயத்தில் குளத்தை சுற்றி நடை பாதையை அமைத்தல், படிக்கட்டுக்களை நிர்மாணித்தல், படிக்கட்டுக்களுக்கு கொங்கிறீட் இடல் மற்றும் இரும்பு தூண்களுடன் மரக்குற்றிகளை பொருத்துவதற்காக 2017 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 2,109,544 செலவில் தேவையானளவு மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை 2018 மே மாதம் நடாத்தப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) சீத்தாவகபுற நகர சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 07 உத்தியோகபூர்வ இல்லங்களில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்கள் மாத்திரமே குடியிருந்து வருவதுடன் ஏனைய தேவைகளை உடைய உத்தியோகத்தர்கள் கோரி இருந்த போதிலும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 2.17 ஆம் பிரிவிற்கு முரணாக வீட்டுத்திட்டம் மாற்றப்பட்டு அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கொட்டபொடவத்த கழிவுப் பொருள் தளத்திற்கு அருகில் பாதுகாப்பிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச் சுவர் குப்பை மேட்டின் நெருக்கத்தினால் மூன்று இடங்களில் வெடித்திருந்ததுடன் அது வெடித்துச் செல்லுமாயின் நகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சனசமூக மண்டபம் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் என்பவற்றை உள்ளடக்கிய கட்டிடங்களுக்கு சேத இழப்புக்கள் ஏற்படும் அபாயம் காணப்பட்டது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

**(அ) 2017 திசெம்பர் இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடமான எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 04 | 02 | 02 |
| இரண்டாம் நிலை | 51 | 47 | 04 |
| ஆரம்ப நிலை | 122 | 112 | 10 |
| மொத்தம் | 177 | 161 | 16 |

**(ஆ) பதவியணியினர் வெற்றிடங்கள்**

செயலாளர் பதவி, கணக்காளர் பதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஏனைய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**(இ) விடுமுறை**

சபையில் சம்பளமற்ற விடுமுறை பெற்ற தொழிலாளர் ஊழியர்களின் எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன் ஆண்டு முழுவதும் அவ்வாறு விடுமுறை பெற்றதன் அடிப்படையில் அவர்களிடமிருந்து சபைக்கு நிறைவேற்ற வேண்டிய சேவைகள் உரிய முறையில் பெறப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) ஊழியர் கடன்**

பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 404,247 தொகை அறவிடவேண்டிக் காணப்பட்டதுடன் 23 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 148,097 கடன்மீதி அறவிடமுடியாக் கடனாக இருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) நகர சபைக்குச் சொந்தமான பேரூந்து நிலையக் கட்டிடத்தின் மேல் மாடியில் 75 கடைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 18 கடைகள் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ள 10 சமூக சபைகள் மற்றும் 02 வள நிலையங்கள் என்பன செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

(இ) குளக்காட்டின் சுற்றாடல் வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சனசமூக மண்டபம் எந்தவித பயன்படுத்தலுமின்றி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) பிலிப் குணவர்த்தன விளையாட்டரங்கின் நீர்க் கட்டணப் பட்டியலுக்காக பணம் செலுத்தாமையின் அடிப்படையில் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதி மீண்டும் அதே நிலைக்கு கொண்டுவருவதற்காக ரூபா 9,785 மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

(ஆ) புவக்பிட்டிய பொது நூலகத்தின் பயன்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் அங்கத்தவர்களுக்கு எடுத்துச் செல்வதற்கு வழங்கப்பட்ட புத்தகங்களின் பெறுமதி ரூபா 5,613 தொகையான புத்தகங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களுக்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கும் இடையே 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான அசாதாரண முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 17 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 785,700 நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 15 செலவின விடயங்களுக்காக ரூபா 18,100,800 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 50 சதவீதத்தை விட செலவிடப்படாத தொகை ரூபா 14,049,007 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் / ஆதனங்கள் | பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (ஆ) | ஊழியர் முகாமைத்துவம் | பதவியணியினர் அங்கீகரிக்கப்படாமை மற்றும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (இ) | செயற்திட்டம் | போதியளவான மேற்பார்வையின்மை மற்றும் பூர்த்தி செய்வதில் தாமதம் |